**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 01-07-2022**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-07-01 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-07-02 | 2022-07-03 | 2022-07-04 | 2022-07-05 | 2022-07-06 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 10.0 | 2.0 | 3.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 36.0 | 34.0 | 34.0 | 34.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 24.0 | 24.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 75 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 60 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8.0 | 8.0 | 8.0 | 8.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 290 | 290 | 270 | 270 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 7 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஜுலை 2,3,4,5,6 தேதிகளில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34-36 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24-25 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-75 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50-60 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 8 கி.மீ வரை வடமேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 06.07.2022 முதல் 12.07.2022 வரை இயல்பைவிட குறைவான மழை மற்றும் இயல்பான வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்பொழுது கண்காணித்து பூச்சியின் தாக்கம் தென்பட்டால் அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே பயிர்கள் பாதிப்படையாமல் இருக்க வடிகால்வசதி அமைக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | கடந்த வாரத்தில் பெய்துள்ள மழையினை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களை விதைக்கலாம் . நெல் நடவுவயலில் களைகளைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பியூட்டாக்ளோர் களைக்கொல்லி 2.5 லிட்டர் + 25 கிலோ மணலுடன் கலந்து நட்ட மூன்றாம் நாள் இடவும். தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக நெற்பயிரில் இலை சுருட்டுப்புழு தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இதனை கட்டுப்படுத்த அசாடிராக்ட்டின் 0.03% 100 மி.லி /எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| நிலக்கடலை | மண் பரிசோதனை செய்யாவிட்டால் இறவைப்பயிர் நிலத்திற்கு 25 :50 :75 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களுடன் 60 கிலோ கந்தகக் கழிவை இடவேண்டும்.தழைச்சத்து மற்றும் மணிச்சத்தை மூன்று பிரிவுகளாக பிரித்து அடிப்படையாக 50% + விதைத்த 20-ம் நாளில் 25 % மற்றும் விதைத்த 45-ம் நாளில் 25 % அளிக்கவும். மழைகாலமாக இருக்கும் காரணத்தினால் நிலக்கடலையில் இரும்புச்சத்து குறைபாடு ஏற்படவாய்ப்புள்ளது . அதனால் பெரஸ்சல்பேட் 1 % @10 மி.லி /லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும் . |
| மக்காச்சோளம் | தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக மக்காசோளத்தில் படைப்புழு தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இதனை கட்டுப்படுத்த குளோரோரோடேரேனிலிபுருள் 18.5 SC 4 மி.லி / 10 லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | தக்காளி நாற்றங்கால் அமைக்க இது நல்ல தருணம். எனவே ட்ரைக்கோடெர்மா@ 4 கிராம் / கிலோ விதைகளுடன் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | மழை,இடி,மின்னல் நேரத்தில் மரத்தடியில் கட்டி வைக்க வேண்டாம். சினையில்லா பசுக்கள் கிடேரிகள் கன்றுகளுக்கு (10 மி.கி/1கிலோ உடல் எடை) குடற்புழு நீக்க மருந்து ஆக்சிகுளோக்ஸனைடு திரவம் உடல் எடைக்கு ஏற்றவாறு தரவும். கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடவும். |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | குடற்புழு நீக்க மருந்து ஆக்சிகுளோஸனைடு மருந்து 15 மி.கிராம் ஒரு கிலோ உடல் எடை வீதம் குடிக்க கொடுக்கவும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | மழைக்காலங்களில் ஆழ்கூளம் மூலம் வளர்க்கப்படும் நாட்டு கோழிகளில் அதிக ரத்த கழிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை தடுக்க ஆழ்கூளம் சுத்தமாகவும், ஈரப்பதம் இல்லாமலும், சுத்தமான குடிநீர் கோழிகளுக்கு கிடைக்குமாறு செய்யவேண்டும். |